பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 163

வெள்ளிக்கிழமை
09 மே 2025

சித்திரை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## போலிஸ் அலுவலர் நீரில் மூழ்கிச் சாவு!

வவுனியா, மே 9
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஹெப்பற்றிக்கொலாவ பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் 11

# தமிழர்களை முடக்குவதற்கே காணி சுவீகரிப்பு நடவடிக்கை

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, மே 9**
**தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கு கடந்த அரசாங்கங்களைப்போல தற்போதைய அரசாங்கமும் தயாரில்லை. ஆதலால், தமிழ் மக்கள் எதிர்காலத்தில் போராடலாம் என்ற அச்சத்தால்தான் கரையோரக் காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.** 11

### உள்ளூராட்சி சபைகளில்

## ஜூன் 2க்கு முன்னர் ஆட்சி அமையுங்கள்

### தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, மே 9
உள்ளூராட்சி சபைகளில் 50 வீதுத்துக்கும் மேற்பட்ட இடங்களைப்பெற்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களை எதிர்வரும் ஜூன் 10

### யாழ்ப்பாண சபைகளில் ஆட்சியமைக்க

## சங்கின் ஆதரவைப் பெறுவதற்கு தமிழரசும், முன்னணியும் முஸ்தீபு

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக, ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் ஆதரவை 10

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் ஆட்சியமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை

### கஜேந்திரகுமார் எம்.பி. வெளிப்படை

யாழ்ப்பாணம், மே 9
உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியமைப்பது தொடர்பில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் கலந்துரையாடியுள்ளோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை 10

## பயங்கரவாதத் தடைச்சட்டம் மூன்றே மாதங்களில் நீக்கம்

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 9
நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டம் வெறும் மூன்று மாதங்களில் நீக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் 11

## ஐ.பி.எல். தொடரில் ட்ரோன் தாக்குதல்!

பாதியில் கைவிடப்பட்டது ஆட்டம்
பி.எஸ்.எல். தொடரிலும் தாக்குதல்

**விரிவு பக்கம் - 10**

## தேசிய மக்கள் சக்தியுடன் டீல் வைப்போர் துரோகிகள்

### சட்டத்தரணி மணிவண்ணன் காட்டம்



யாழ்ப்பாணம், மே 9
தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் 'டீல்' பேசி ஆட்சியமைப்போர் தமிழினத் துரோகிகள் என யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.
யாழ். ஊடக அமையத்தில் நேற்று 11

### பயங்கரவாதத் தடைச்சட்டம்

## சிறப்புக்குழு இன்று கூடும்!

கொழும்பு, மே 9
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான குழு, இன்று கூடவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.
பயங்கரவாதத் தடைச்சட்டம் 11

### கோவில் திருவிழாவில்

## யானை தாக்கியதில் மூவருக்குக் காயம்!

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் யானை தாக்கியதால் 11



'பாலும் தெளிதேனும் பாகும் பருப்போட டீலும் கலந்திட்டு எங்கட அரசியலில!'

## புதிய பாப்பரசர் நேற்றுத் தெரிவு அவரின் பெயர் 14ஆம் லியோ!

ஊரோம், மே 9
கத்தோலிக்க திருச்சபையின் புதிய திருத்தந்தையாக, அமெரிக்காவைச் சேர்ந்த கர்தினால் றொபேட் பிரான்சிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 10



விரிவுகள் பக்கம் - 11

## பிறந்து ஏழு நாள்களேயான பச்சிளம் சிசு துயரச் சாவு!

---

## உழவு இயந்திரத்தில் சிக்கி அராலியில் ஒருவர் பலி!

---

## திடீர் சுகவீனம் காரணமாக பாலகன் பரிதாபச் சாவு!

---

## தோட்டத்துக்குச் சென்றவர் மின்னல்தாக்கி உயிரிழப்பு

ஏழாலையில் துயரம்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**கொவிசெத**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4067
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 12 26 57 64
விசேட எழுத்து Y

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1134
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 17 22 28 60

**NLB ஜய**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0093
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 4 8 8 9

**மெகா பவர்**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2173
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 20 32 34 57

**மஹஜன சம்பத**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5825
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 6 6 5 4 0 9

**தன நிதானய**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1855
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 03 35 41 65
விசேட எழுத்து X

**அத சம்பத**
திகதி 08.05.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0400
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 5 4 0 9

# பூகோள மோதலில் இலங்கை தலையிடாது

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, மே 9**

**பிராந்திய அமைதிதான் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. எனவே, எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் இலங்கையின் வான், கடல் மற்றும் நிலப் பரப்பை பயன்படுத்துவதற்கு இடமளிக்கமாட்டோம் என்பதுடன் இந்துசமுத்திர வலயத்தில் இடம்பெறும் பூகோள மோதலில் இலங்கை தலையிடாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது இந்தியா-பாகிஸ்தானுக்கிடையிலான மோதல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியா, பாகிஸ்தான் நிலைவரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. அரசாங்கத்துக்கும் தகவல் வழங்கப்பட்டுவருகின்றது. இந்துசமுத்திர வலயத்தில் இடம்பெறும் பூகோள மோதலில் இலங்கை தலையிடாது என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். எமது இறையாண்மையைப் பாதுகாத்துக்கொண்டு, அணிசேராக்கொள்கையின் பிரகாரம் செயற்படுவோம்.

அதேபோல தீவிரவாதத்தை நாம் ஆதரிக்கமாட்டோம். தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்பு வழங்கப்படும். எமக்குப் பிராந்தியப் பாதுகாப்பு, மக்களின் பாதுகாப்பு மற்றும் பிராந்திய அமைதி என்பனதான் முக்கியமானவை. அதற்காக நாம் செயற்படுவோம். அதேபோல இந்திய, பாகிஸ்தான் பிரச்சினை தெற்காசிய அரசியல் மற்றும் இந்துசமுத்திர பொருளாதாரத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது தொடர்பாக ஆராய்கின்றோம் - என்றார். (ச-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0533
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 8 0 2 4 5 1

**Super Ball DLB**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2799
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 40 64 68 70

**சனிதா DLB**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 20 34 63 80
வெற்றி வாரம் 4960

**SASIRI DLB**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0678
வெற்றி இலக்கம் 02 14 19

**லக்ன ராசி**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம் 02 36 40 49
சீட்டிழுப்பு வாரம் 4511

**KAPRUKA DLB**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 19
வெற்றி இலக்கம் 05 27 67 71
வெற்றி வாரம் 1975

**அத கோடிபதி DLB**
திகதி 08.05.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 11 27 45 57
வெற்றி வாரம் 2625



# 3 ஆண்டுகளில் ரணில்

## 33 தடவைகள் பறந்து 1.27 பில்லியன் செலவு

கொழும்பு, மே 9

2022 ஆம் ஆண்டு முதல், 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் 33 தடவைகள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது, ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, நாடாளுமன்றத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு 14 தடவைகளும், 2023 ஆம் ஆண்டு 14 தடவைகளும், 2024 ஆம் ஆண்டு 5 தடவைகளும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார்.

இந்த விஜயங்களின்போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1.27 பில்லியன் செலவிட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

### பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக ந. பிறேம்குமார்

யாழ்ப்பாணம், மே 9

மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி அவர் மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-100)

# 'சர்வஜன அதிகாரம்' வித்தியாசமானது!

கொழும்பு, மே 9



உள்ளூராட்சிமன்றங்களில் பெரும்பான்மையைப் பெறுவதற்காக தனது கட்சியான சர்வஜன அதிகாரம் எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டணி வைக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் ரீதியாக ஈடுபடுவதற்காக ஒரு கட்சியுடன் அல்லது சக்தியுடன் கைகோர்க்கக் கட்சிக்கு எந்த அவசியமும் இல்லை. அத்தகைய எந்த முடிவையும் எடுக்கத் தயாராக இல்லை. நாங்கள் வேறுபட்ட அரசியல் கலாசாரத்தைக் கொண்ட ஒரு சுயாதீனக் கட்சி. நாங்கள் வேறு எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்கவோ அல்லது ஆதரிக்கவோ மாட்டோம் - என்றார்.

இதேவேளை சர்வஜன அதிகாரக் கட்சி 2இலட்சத்து 94 ஆயிரத்து 681 வாக்குகளைப் பெற்று, 7 உள்ளூராட்சி மன்றங்களில் 266 ஆசனங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஐ.ம.சக்திக்கு ஐ.தே.கட்சி கைகொடுக்கும்

கொழும்பு, மே 9

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு உதவத் தயார் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ருவன் விஜேவர்த்தன இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கொழும்பு மாநகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு எமது உறுப்பினர்களின் ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம். ஆனால் இதுவரை எந்த வேண்டுகோளும் விடுக்கப்படவில்லை.

அதே போன்று நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் ஒன்றிணைந்து அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய இடங்களில் அதற்கான ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக்கட்சி தயாராக உள்ளது - என்றார். (எ-இ)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்வதில் அரசு உறுதி

## ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் இலங்கைப் பிரதிநிதிகள் தெரிவிப்பு



**கொழும்பு, மே 9**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்யும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் இலங்கைப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை கூட்டு ஆணைக்குழுவின்கீழ் இயங்கும் ஆட்சியியல் நிர்வாகம், சட்டவாட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பணிக்குழுவின் 8ஆவது கூட்டத்திலேயே இலங்கைப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தராதரங்களுக்கு அமைவான புதிய சட்டத்தின் ஊடாக, அதைப் பதிலீடுசெய்வதற்கு அவசியமான கால எல்லை தொடர்பாக இலங்கைப் பிரதிநிதிகள் விளக்கமளித்துள்ளனர். அதற்குப் பதிலளித்துள்ள ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ஊடாக ஐரோப்பிய ஒன்றியச் சந்தையைத் தொடர்ந்து அணுகுவதை உறுதிசெய்வதற்கு சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நியமங்களுக்குப் பொருத்தமான சட்டத்தைக் கொண்டுவரவேண்டியது அவசியம்- என்றனர். (எ-இ)

## போர்ப்பதற்றம்
## லாகூருக்கான விமானம் இரத்து

கொழும்பு, மே 9

பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கையிலிருந்து பாகிஸ்தானின் லாகூருக்குச் செல்லும் அனைத்து விமானங்களும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் நேற்றுக்காலை பாகிஸ்தானின் லாகூரில் மூன்று குண்டுவெடிப்புகள் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது. இதனால் எயார் லைன்ஸ் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

லாகூர் விமானங்களில் முன்பதிவுசெய்த பயணிகள், மறு அட்டவணை அல்லது பணத்தைத் திரும்பப்பெறுவது தொடர்பான கூடுதல் தகவலுக்கு விமான நிறுவனத்தைத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சம்பிக்கவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, மே 9

தனக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல்செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இந்த மனு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு இராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்தினை ஏற்படுத்தி சாட்சிகளை மறைக்க முயன்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் சம்பிக்கவுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சிசுக்களுக்கு தலசீமியா நோய்



கொழும்பு, மே 9

நாட்டில் 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 500 குழந்தைகள் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சின் தொற்றாநோய்கள் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சமித்தி சமரக்கோன் தெரிவிக்கையில், நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் 40 முதல் 50 குழந்தைகள் தலசீமியா நோயாளிகளாக அடையாளம் காணப்படுகின்றனர்.

சுமார் 5 இலட்சம் பேருக்கு தலசீமியா நோய் அறிகுறிகள் உள்ளன. தலசீமியா என்பது பொதுவான மரபணு இரத்தக்கோளாறு ஆகும், இதில் ஹீமோகுளோபின் உற்பத்தி குறைகிறது, இது இரத்தச்சோகைக்கு வழிவகுக்கிறது - என்றார். (ச-இ)

## உலக வங்கித் தலைவர் பிரதமருடன் சந்திப்பு



கொழும்பு, மே 9

இலங்கையின் வளர்ச்சி முன்னுரிமைகள் மற்றும் மூலோபாய ஒத்துழைப்பைத் தொடர்வது குறித்து விவாதிப்பதற்காக உலகவங்கிக் குழுவின் தலைவர் அஜய் பங்கா, பிரதமர் ஹரிணியை பிரதமர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்தார்.

இதன்போது அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலை பங்கா பாராட்டினார். மேலும் பொருளாதார மீட்சியின் பிரதான இயக்கிகளாக வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் அதன் தரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். விவசாயத்தை மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவின் திறனை பங்கா எடுத்துரைத்தார், மேலும் புதுமை மற்றும் உற்பத்தித்திறனுக்கான அதன் பயன்பாட்டை ஆராய இலங்கையை ஊக்குவித்தார். (ச-இ)




இந்தமுறை எலக்சனில முக்கியமான புள்ளியள் சிலர் நேரடியாக நிக்காமல் பட்டியல் வேட்பாளரா இருந்தவை. ஏனென்டால் அவையின்ர அரசியல் மதிப்புக்கு இப்பிடி வட்டாரத்தில எலக்சனில நிக்கேக்க தப்பித்தவறித் தோத்திட்டால் அவ்வளவுதான். 'வட்டாரத்திலேயே வெல்லமுடியாதவர் பார்லிமெண்ட் எலக்சன் கேக்க வந்திட்டார்' எண்டே எதிர்த்தரப்புகள் நக்கலடிச்சு, ஆளின்ர அரசியலை இருட்டாக்கிப் போடுவினம். அதால முந்தி எம்.பி.யா, மாகாணசபை உறுப்பினரா இருந்த சிலர் இந்தமுறை உள்ளூராட்சி எலக்சனில சில சபையளில இப்பிடி பட்டியல் வேட்பாளரா நிண்டவை. பட்டியல் வேட்பாளர் எண்டு 'கவர்' எடுத்துக்கொண்டு, ஓடியாடி பிரசார வேலையளை தீயாச் செய்ததும் இவையள்தான். அந்தப் பிரசாரத்துக்கு கன இடங்களில கைமேல பலன் கிடைச்சும் இருக்கு. ஆனால் எது தங்களுக்குப் பாதுகாப்பு எண்டு நினைச்சினமோ அந்தப் பட்டியல் வேட்பாளர் விசயமே தேவையில்லாத சிக்கல்களைக் குடுத்திருக்கு.

வல்வெட்டித்துறையில சிவாஜியருக்கு தனிமதிப்பு இருக்கு. சின்னனில இருந்து இப்பவரைக்கும் ஆள் போராளிதான். தனக்கெண்டு சொத்துப்பத்துச் சேர்க்காத சுத்தமான தமிழ் அரசியல்வாதியளில சிவாஜியருக்குத்தான் இப்ப முதலிடம். ஆளிட்ட இருக்கிற சொத்தெல்லாம் லோன் மட்டும்தான். எதுக்கும் கிறுங்காத ஒரு மனிசன். தேசியத்துக்காகவும் சனத்துக்காகவும் உயிரைக்கூட குடுக்கிறதுக்கு பின்னிற்காத பிறவி சிவாஜியர்தான். இப்பகூட கடும் வருத்தத்தோடையும், கட்சிக்காக எலக்சனில நிண்டு, பெடியள் மாதிரி ஓடியாடி வேலை பார்த்தவர். முந்தி எம்.பி.யா இருந்த அவர் கட்சிக்காக இந்தமுறை வல்வெட்டித்துறை நகரசபை எலக்சனில பட்டியல் வேட்பாளரா நிண்டவர். சனங்களும் சிவாஜியரில உள்ள மதிப்பால,அவர் இந்தமுறை நிண்ட கட்சிக்குத்தான் கூடுதலா வோட் பண்ணினவை. அங்க மொத்தமுள்ள 9 வட்டாரங்களில 7 வட்டாரங்கள் சிவாஜியரின்ர கட்சிக்குத்தான் கிடைச்சது. அப்பிடியிருந்தும் இந்தக் கண்டறியாத கலப்பு விகிதாசாரத் தேர்தல் முறையால மற்றக் கட்சியளுக்கு 6 போனஸ் சீற் கிடைக்க, 7 வட்டாரத்தில வெண்ட கட்சிக்கு ஒரு போனஸ் கூட கிடைக்கேலை.

தங்கட கட்சி வெண்டால் சிவாஜியர்தான் நகரசபைத் தவிசாளர் எண்டு பிரசாரம் செய்தபடியாலதான் இப்பிடி 7 வட்டாரத்தையும் அந்தக் கட்சியால வெல்லமுடிஞ்சது. ஆனால் போனஸ் சீற் கிடைக்காததால சிவாஜியர் தவிசாளரா வாறதில சிக்கல் ஒண்டு வந்திருக்கு. எண்டாலும் எலக்சனில வெண்ட ஒரு வேட்பாளர் தன்ர பதவியை ராஜினமா செய்தால், அவரின்ர இடத்துக்கு சிவாஜியரைப் போட்டு, தவிசாளராக்கலாம் எண்டும் சொல்லுகினம். வல்வெட்டித்துறைச் சனங்கள் ஆசைப்பட்டமாதிரி சிவாஜியர் தவிசாளரா வந்தால் எல்லாருக்கும் சந்தோசம் தான் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வெளியில் அலையவேண்டிவரும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு குறையக்கூடும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூல்மாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். . வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வெளியூரில் இருக்கும் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக் கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் நீண்டநாள்களாகக் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைப்பது இழுபறியாகும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# யாழில் வீட்டுக்கு 135 ஆசனங்கள்!

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மொத்தமாக 88 ஆயிரத்து 443 வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில் மொத்தமாக 135 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

அதற்கு அடுத்ததாக தேசிய மக்கள் சக்தி 56 ஆயிரத்து 615 வாக்குகளைப் பெற்று, 81 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. மூன்றாம் இடத்தில் உள்ள அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 51 ஆயிரத்து 46 வாக்குகளை மொத்தமாகப் பெற்றுள்ள நிலையில் 79 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 35 ஆயிரத்து 647 வாக்குகளைப் பெற்று 46 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. (எ-இ)

## வலிகாமத்தில் கடும் மழை:

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் வலிகாமத்தின் பல பகுதிகளிலும் நேற்று வியாழக்கிழமை கடும் இடிமின்னல் தாக்கத்துடன் மழை கொட்டித் தீர்த்தது. (ம-66)

## வேட்டைத்திருவிழா

யாழ்ப்பாணம், மே 9

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலின் வேட்டைத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 5மணிக்கு முருகப்பெருமான் குதிரை வாகனத்தில் எழுந்தருளி கோப்பாய் வயலிலுள்ள நாச்சிமார் ஆலயத்திற்குச் சென்று அங்கு வேட்டையாடும் திருவிழா இடம்பெறும்.

தொடர்ந்து கோப்பாய் இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு நீர்வைக் கந்தன் சென்று அங்கு சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெறும். (ச-41-17)

# ஹைஏஸ் விபத்து 12 பேருக்குக் காயம்

மாத்தறை, மே 9

மாத்தறை அக்குரஸ்ஸ பிரதான வீதியில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹைஏஸ் மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை தெற்கு அதிவேக வீதியில் அமைந்துள்ள பலட்டுவ நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. (ச-25,இ)




## மாணவி உயிர்மாய்ப்பு ஆசிரியருக்கு இடமாற்றம்

கொழும்பு, மே 9

கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்ற 16 வயதுடைய மாணவி உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்ட கல்வியமைச்சு குறித்த சம்பவம் தொடர்பாக ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் இது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த மாணவியின் உறவினர்கள் உட்பட பொது மக்கள் இணைந்து மாணவியின் மரணத்துக்கு நீதிகோரி, பாடசாலை அருகே போராட்டத்தில் நேற்று ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## யாழ். புகையிரத நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்!

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கான இயந்திரம் புனரமைத்து நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 72 ஆவது அணி பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் இந்த இயந்திரம் புனரமைத்துக் கையளிக்கப்பட்டது.

திறப்பு விழாவில் யாழ்ப்பாண புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி பிரதீபன், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் புகையிரதநிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குடிதண்ணீர் சவர்த்தன்மை மிக்கதாக காணப்படும் நிலையில் குறித்த இயந்திரத்தால் புகையிரதநிலையத்துக்கு வருபவர்களும் புகையிரதநிலையத்துக்கு அருகில் வசிப்பவர்களும் பயன்பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி நேற்று வழங்கப்பட்டது. (ச-113)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# புதிய தேர்தல்முறைமை வேண்டும்

இம்முறை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில், அரசியற்கட்சிகள் வட்டார அடிப்படையிலும், விகிதாரசார அடிப்படையிலும் உள்ளூராட்சி சபைகளில் ஆசனங்களை வென்றிருக்கின்றன. வட்டார மக்களின் ஆதரவை இழந்த கட்சிகளின் உறுப்பினர்கள் பலரும்கூட உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினராகும் சந்தர்ப்பம் இந்தக்கலப்பு விகிதாசார முறைமையால் கிடைத்திருக்கின்றது. இந்தத் தேர்தல் முறைமை மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் முடிவைத் தருகின்றதா என்பது கேள்வியாகவே இருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளே மக்களின் தெரிவாக இருந்தன. பெரும்பாலானவட்டாரங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் வேட்பாளர்களே வெற்றிபெற்றிருந்தனர் – அதனடிப்படையில் உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலானவற்றில் தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னிலைபெற்று, அவையே ஆட்சியமைக்கும் என்று எதிர்பார்த்தாலும், விகிதாசார ஆசனங்கள் அந்த நிலைமைகளைத் தலைகீழாக மாற்றியிருக்கின்றன. மக்களின் ஆதரவை இழந்த கட்சிகள் விகிதாசார அடிப்படையிலான ஆசனங்கள் மூலம் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதில் தாக்கம்செலுத்தும் கட்சிகளாக மாற்றம் பெற்றிருக்கின்றன. அதைவிடவும் சில சபைகளில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட ஆசனங்களைவிடவும் அதிக ஆசனங்களை ஒதுக்கவேண்டிய நிலைமையையும் இந்த கலப்பு விகிதாசார முறைமை ஏற்படுத்தியிருக்கின்றது. இம்முறை வடக்கில் மட்டும் 7 உள்ளூராட்சி சபைகளில், அறிவிக்கப்பட்ட ஆசனங்களைவிடவும் அதிக ஆசனங்கள் ஒதுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படும் கலப்பு விகிதாசார முறைமை குழப்பங்கள் சூழ்ந்ததாகவே இருக்கின்றது. வாக்காளர்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்காத இந்தத் தேர்தல் முறைமையால், உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பது பெரும் அக்கப்போராகவே மாறியிருக்கின்றது. ஒரு நாட்டின் கிராமிய அபிவிருத்தி, உட்கட்டமைப்பு நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கெடுக்கும் உள்ளூராட்சிசபைகள் சிறப்பாகச் செயற்படமுடியாமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணம் என்பதை மறுக்கமுடியாது. உள்ளூராட்சி சபைகள் சரியாக இயங்குவதற்கு– அவற்றில் பலமான ஆட்சி அமைக்கப்படுவது அவசியமானது. ஆனால் தற்போதுள்ள தேர்தல் முறைமை அதற்குப் பெரும் தடையாக இருக்கின்றது என்பதைத் தேர்தல் முடிவுகளின் ஊடாக உணரமுடிகின்றது. வடக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் இந்த நிலைமையே இருக்கின்றது.

உள்ளூராட்சிசபைகள் பலமாக அமைக்கப்பட்டால் மட்டுமே கிராமிய மட்டத்திலான அபிவிருத்திகள் நிலைபேறானதாக அமையும். கலப்பு விகிதாசார முறைமையில் உள்ள குளறுபடிகளைக் கருத்திற்கொண்டு, இனியாவது உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு புதிய முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயலவேண்டும். மக்களின் 'வாக்காளர்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கக்கூடிய ' உள்ளூராட்சி சபையில் ஆட்சியைப் பலமாக அமைக்கக்கூடியவாறு அந்தத் தேர்தல்முறைமையைக் கட்டமைக்கவேண்டியது அவசியம். அரசாங்கமும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் இந்த விடயத்தில் கரிசனைகொள்ளவேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் பலமாகச் செயற்படுவதற்கு வழியேற்படுத்தும் சிறந்த தேர்தல் முறைமை ஒன்றை அவர்கள் கண்டறியவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

**நாளொரு நல்வார்த்தை**

உங்கள் நேரத்திற்கு ஒரு வரையறை உண்டு. ஒவ்வொரு கணத்தையும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள்.

– மார்கஸ் அரேலியஸ்–



# மின்கட்டணத் திருத்தம்; விரைவில் பிரேரணை




## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நம்பிக்கை

கொழும்பு, மே 9

**இந்த ஆண்டுக்கான இரண்டாவது மின்கட்டணத் திருத்தம் தொடர்பான பிரேரணையை இலங்கை மின்சார சபை எதிர்வரும் வாரத்துக்குள் சமர்ப்பிக்கும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.**

எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மின்கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளவேண்டுமெனில், அது தொடர்பான பிரேரணையை மே மாதம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணைக்குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான பிரேரணை கிடைத்ததும், 3 முதல் 6 வாரங்களுக்குள் இது தொடர்பில் ஆராய்ந்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதன் தீர்மானத்தை அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்கட்டணங்களில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்று சர்வதேச நாணயநிதியம் கோரியுள்ளது. மின்கட்டணங்கள் திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளதபோதும், இலங்கை மின்சார சபை இதுவரை பொதுப் பயன்பாட்டுகள் ஆணைக்குழுவிடம் பொருத்தமான பிரேரணையைச் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## ஹெகலியவுக்கு விளக்கமறியல்



கொழும்பு, மே 9

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது. முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல்தொடர்பான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் நேற்று முன்னிலை யாகியபோது கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## எம்.பி.யானார் சமந்த ரணசிங்க

கொழும்பு, மே 9

சமந்த ரணசிங்க சபாநாயகர் முன்னிலையில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார். உயிரிழந்த தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோசல நுவான் ஜயவீரவின் இடத்துக்கு சமந்த ரணசிங்க இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். 2024 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ரம்புக்கனை தொகுதி அமைப்பாளராக சமந்த ரணசிங்க பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கையிருப்பு வீழ்ச்சி

கொழும்பு, மே 9

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்புச் சொத்துகள் 2025 ஏப்ரல் மாதத்தில் 3 வீதம் குறைவடைந்து 6.32 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது. இது மார்ச் 2025 இல் 6.53 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## வளர்ச்சிகாணும் சுற்றுலாத்துறை

கொழும்பு, மே 9

நாட்டுக்குக் கடந்த ஏப்ரல் மாதம் மட்டும் ஒரு இலட்சத்து 74ஆயிரத்து 608 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வருகைதந்த சுற்றுலா பயணிகளைவிட 17.3 சதவீதம் அதிகரித்துள்ளது. இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மொத்தமாக 8 இலட்சத்து 96 ஆயிரத்து 884 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை வந்துள்ளனர். இது நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு சிறந்த எடுத்து காட்டாகும் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

வடக்கில்

# சிறுதானியச் செய்கைக்காக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 9

வடக்கு மாகாணத்தில் சிறுதானியச் செய்கையை ஊக்குவிப்பதற்கான திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலத்திலிருந்து 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வடமாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன் தெரிவிக்கையில்,

வட மாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்குச் சிறுதானியச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நிதி உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாமை, திணை, இறுங்கு, கம்பு, வரகு, குரக்கன் ஆகிய சிறுதானியங்கள் இத்திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்படவுள்ளன. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியச் செய்கையை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு ரூபா 15 ஆயிரம் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளது.

குறைந்தது கால் ஏக்கர் பரப்பில் சிறுதானியச் செய்கையை மேற்கொள்பவர்களும் இதற்காக விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்ப முன்னுரிமை அடிப்படையில் பயனாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மேலும் சிறுதானியச் செய்கைக்கான விதை உள்ளீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

சிறுதானியச் செய்கை தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்களையும் விவசாயத் திணைக்களம் வழங்குவதுடன் சிறுதானிய உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது. சிறுதானியச் செய்கையில் ஈடுபட ஆர்வம் உள்ளோர், குறித்த பிரதேசத்திற்கான விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தரை அல்லது வடமாகாண விவசாயத் திணைக்கள மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களையோ வட மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தையோ தொடர்புகொள்ளமுடியும்.

அத்துடன் வடமாகாண விவசாயத் திணைக்கள மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத் தொடர்பு இலக்கங்கள் யாழ். மாவட்டம் 0212222175, கிளிநொச்சி மாவட்டம் 0212285726, மன்னார் மாவட்டம் 0232222155, முல்லைத்தீவு மாவட்டம் 021 2290006, வவுனியா மாவட்டம் 0242222324 ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளலாம்- என்றார். (ச-33-66)

# நாக விகாரையில் வெசாக் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 9

2025 ஆம் ஆண்டு வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் மற்றும் 51 ஆவது காலாட்படைத் தலைமையகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், சிறப்பு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ஸ்ரீநாக விகாரை புண்ணிய பூமியில் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

அலங்கார வெளிச்சக்கூட்டுக் கண்காட்சி, அன்னதானம் மற்றும் பக்திப்பாடல்கள் இசைத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)




# கசிப்புடன் ஒருவர் வவுனியாவில் கைது

வவுனியா, மே 9

வவுனியாவில் கசிப்புடன் நபரொருவர் பூவசரங்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாலிக்குளம் குளப்பகுதியில் வைத்து குறித்தநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 90லீற்றர் அளவுகொண்ட ஒரு பரல் கசிப்பு மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-110)

# இலவசக் கண்பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

மன்னார், மே 9

'ஈகில் ஐ இன்டர்நெஷனல் நெட் வேர்க் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இலவச சமாக கண்பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. இந்தச் சேவை துள்ளுக்குடியிருப்பு ஆலய வளாகத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ளது. துள்ளுக்குடியிருப்பிலிருந்து கட்டுக்காரன் குடியிருப்பு வரையுள்ள பின்தங்கியுள்ள கிராமத்தைச் சேர்ந்த 39 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொழும்பிலிருந்து வருகை தரும் மருத்துவர்களால் கண்பரிசோதனை மேற்கொள்ளப்படுமென ஏற்பாட்டாளரும் சமூக சேவையாளருமான ஸ்ரீபன் செந்தி தெரிவித்துள்ளார்.

குறித்த கிராமத்துக்கு அப்பாற்பட்டவர்களும் இதில் பயன்பெறமுடியும் என்றும் கண் பரிசோதனை மேற்கொள்ள விரும்புவோர் 0774974108 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,60)

# சித்திராப் பூரணை

யாழ்ப்பாணம், மே 9

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சித்திராப் பூரணைப் பெருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை வில்லூன்றி புனித திருத்தலத்தில் இடம்பெறும். காலை 7மணிக்கு ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் அபிஷேகம் என்பன இடம்பெற்று காலை 8மணிக்கு விநாயகப் பெருமான் தீர்த்தவாயிலுக்கு எழுந்தருள்வார். தொடர்ந்து பொதுமக்கள் புனித தீர்த்தத்தில் நீராடவும் தீர்த்த சங்கற்பம் செய்து பிதிர்க்கடன் நிறைவேற்றவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-41-17)



# கிளிநொச்சி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானம்

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தை மேலும் அபிவிருத்திசெய்து வினைத்திறனாகச் செயற்பட வைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது அபிவிருத்திப் பணியை எதிர்காலத்தில் கரைச்சிப் பிரதேசசபையிடம் கையளித்து வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாகவும் குறித்த விடயத்தை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ. சோதிநாதன், மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் காணி நளாயினி இன்பராஜ், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத்தலைவர் ஆர். உமாகரன், ,பிரதேச செயலாளர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைச்சி பிரதேச செயலாளர், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-113)

# யாழ்.பல்கலை பொன்விழா பிரமாண்டமாக பிரான்ஸில்!

## ஜீன் 8 ஆம் திகதி நடைபெற ஏற்பாடு

பாரிஸ், மே 9

யாழ். பல்கலைக்கழகத்தின் பொன்விழா பாரிஸின் புறநகர்ப் பகுதியான வில்லெனுவே செயின்ட் ஜார்ஜிஸ் எனும் இடத்தில் ஜூன் மாதம் 8 ஆம் திகதி பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழகம் உட்பட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் வளர்ச்சிக்கு உதவி புரிந்துவரும் லிஃட் (LIFT) ஆய்வு அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன், பிரான்ஸில் வாழும் யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்களால் இந்த நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. பாரம்பரிய மற்றும் கலாசார கலை நிகழ்ச்சிகளும் இரவு விருந்தும் இடம்பெறவுள்ளன. இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் பழைய மாணவர்களால் தமிழ்க் கலாசாரத்தை பிரதி பலிக்கும் இசை, நடன நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. நிகழ்வில் பிரான்சில் வாழும் பழையமாணவர்கள் உட்பட ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட யாழ். பல்கலைக் கழகத்தின் பழையமாணவர் களும் பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25,125)

# மாகாணசபை சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றில்!

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9
மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதை அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்தி உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது

கடந்த நாடாளுமன்றத்திலேயே மாகாணசபைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். அந்தச் சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. மூன்றாவது வாசிப்புக்கும் தினம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் நாடாளுமன்ற இறுதி அமர்வு நிகழ்ச்சி நிரலில் இருந்து அது அகற்றப்பட்டமையால் நிறைவேற்றப்படவில்லை. மாகாண சபைத்திருத்தச் சட்டத்தை இ.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் கொண்டுவர முயன்றபோது, அது தமது அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை அது நடக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், நான் கொண்டுவர இருந்த இந்தத் தனிநபர் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்குரிய முன்னறிவிப்பு வழங்கியுள்ளார்.

அந்தச் சட்டவரைவை உடனடியாக ஏற்று நிறைவேற்றினால் மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தமுடியும். மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை - என்றார். (எ-125)

# தமிழ்த் தேசியப் பற்றுக்கொண்ட கட்சிகளுடன் ஆட்சியமைப்போம்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

**மன்னார், மே 9**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கமைய வடக்கு- கிழக்கில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கமைய தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக்கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மக்கள் வடக்கு - கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ளனர். தமிழர்களை தமிழர்கள் ஆளக்கூடிய வகையில் தமது ஆணையை வழங்கி உள்ளனர். மேலும் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகப் பயணிக்கவேண்டும் என்கின்ற செய்தியையும் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டுநாங்கள் ஆட்சி அமைப்போம். நாங்கள் தமிழரசுக் கட்சியுடனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியுடனும் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம். எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியாகச் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் - என்றார். (ச-56)


சாவகச்சேரி நகராட்சி மன்றம்
பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ்
சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட
கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க
மீள்கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.05.2025 தொடக்கம் 22.05.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 23.05.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 23.05.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.
கேள்விஅட்டவணை

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/BT4/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/06 | ரூபா 11,277,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 169,155.00 | ரூபா. 2,000.00 |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும், சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் " என்ற முகவரிக்கு 23ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது..
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
09.05.2025


# வடக்கு மக்களின் பற்று துளியும் குறையவில்லை

## அமைச்சர் சந்திரசேகர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 9
தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை. அரசியல் இருப்புக்காகவே தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதாக சில குழுக்கள் போலிப் பரப்புரை முன்னெடுத்துவருகின்றன. நாம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத்தேர்தலென்பது வேறு, உள்ளூராட்சிசபைத் தேர்தலென்பது வேறு. எனவே, உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளுடன்தான், உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவை ஒப்பிடவேண்டும்.

அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 ஆம் ஆண்டு தேர்தலில் வடக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில்தான் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால் இம்முறை வடக்கில் எல்லா பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயமா கும். மக்களைப் பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல் வாதிகளுக்கு இது பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதாக போலிப்பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால்தான் நிச்சயம் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். நிச்சயம் அதனைச் செய்வோம். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டுவருகின்றது- என்றார். (ச-26)



# கற்பனைக் கதைகளையே கட்டவிழ்த்து விடுகின்றனர்

## கஜேந்திரகுமார் எம்.பிக்கு அமைச்சர் வசந்த பதில்

கொழும்பு, மே 9
வடக்கு மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் அரசாங்கமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும். எனவே, சில விடயங்கள் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாயைகளைத் தோற்றுவிக்கின்றார் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. உரையாற்றிய பின்னர், கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்ததாவது:
அரசாங்கமும், இராணுவமும் இணைந்து வடக்கில் இனவாதத்தை பரப்புவதாக கஜேந்திரகுமார் எம்.பி. குற்றஞ்சாட்டினார். இனவாதத்தைத் தோற்கடித்த அரசாங்கம்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும் என்பதை கூறிக்கொள்கின்றேன். அதேபோல வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்த அரசாங்கமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும். எனவே, இந்தநாட்டில் இனவாதத்துக்கு மீண்டும் இடமளிக்கப்படமாட்டாது.

எமது நாட்டில் காணிகளை கையகப்படுத்திய அரசியல் வாதிகள் பற்றியும் எதிர்காலத்தில் நாம் கதைப்போம். காணிகளை கையகப்படுத்தி நண்பர்களுக்கு விற்றவர்கள் உள்ளனர். வடக்கிலும் அப்படி நடந்துள்ளது. வடக்கு மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்படும் - என்றார். (ம-44)


## கண்ணீர் பூக்களின் காணிக்கை



எமது பாடசாலையின் அதிபர்
**திருமதி அம்பிகை சிவஞானம்**
அவர்களின் அன்பு மகன்
**அமரர் சிவஞானம் நிலக்சன்**
(பொறியியலாளர்)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவுத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்

மண்ணில் 08.01.1994
விண்ணில் 07.05.2025

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.**


# தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், மே 9
மன்னார் மடு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாக அவர் அண்மையில் தனக்குத் தானே தீமூட்டியுள்ளார். படுகாயங்களுடன் மீட்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

# குடும்பத்தலைவர் உயிர் மாய்ப்பு!

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாணம் அராலிப் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

33 வயதான அவர் வீட்டில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாகவே, தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)


## வீடு வாடகைக்குண்டு

அன்னசத்திரலேன்
கந்தர்மடம்,
வீனஸ் வைத்தியசாலை
முன்பக்கமாக வீடு
வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**077 482 8419**



## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1936
மறைவு 30 . 05 . 2025



**கனகசபை வடிவாம்பிகை**

நயினாதீவு, 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 5ம் வட்டாரம் சமாதி கோவிலடியினை வதிவிடமாகவும், இருபாலை வீதி கோண்டாவில் கிழக்கினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகசபை வடிவாம்பிகை அவர்கள் நேற்று (08.05.2025) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், முத்துலிங்கதாஸ், சடாட்சரதேவி, சந்தனமலர், ஸ்ரீரங்கநாயகி, கனகாம்பிகை, மகேஸ்வரி, காலஞ்சென்ற ரகுநாததாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமகட்செல்வி, இராசரத்தினம், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சிவனேஸ்வரன், பாக்கியநாதன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவபாதமணி மற்றும் ஞானப்பூங்கோதை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னம்மா, மீனாட்சி, மாணிக்கம் ஆகியோரின் மைத்துனியும், சரஸ்வதி காலஞ்சென்ற நாகலட்சுமி, இரத்தினசபாபதி, மருதப்பு, காசிப்பிள்ளை ஆகியோரின் சகலியும், பாகேஸ்வரி, ஹயனிகாந்தன், சுதர்சன், ஸாயினி, சிந்துஜன், நிஜந்தன், பிரியங்கனி, பிரதீப்குமரன், நிருஷாங்கனி, பிரசாந், டர்ஷன், ரனுஷன், மேரிவர்ஷனா, கஜவர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரணிகா, திஷிதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2025) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். CS/58190) J-1

தகவல்:
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 04 . 1948
மறைவு 07 . 05 . 2025



**திரு. வைத்திலிங்கம் சிவபாலன்**

திரு. வைத்திலிங்கம் சிவபாலன் அவர்கள் நேற்று முன்தினம் (07.05.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-தங்கமுத்து தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம்-சாவித்திரி தம்பதியின் மருமகனும், ஞானேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், செந்தில்வாசன், செந்தில்குமரன், செந்தில்ராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். சுமங்கலா, கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், டிருஜன், ஜெனீசன், லினிஷா. பவிஷா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தர்மபாலச்சந்திரன் (அன்னப்பிள்ளை). ஜெயபாலன், றஞ்சினி ஆகியோரின் சகோதரரும் விஜிதா. தபோஜன் ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (10.05.2025) சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி. மடத்தடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொல்லங்கலட்டி,
மாவிட்டபுரம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
மனைவி-071 904 8595
தபோ-077 841 0464

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 03 . 1958



மறைவு 07 . 05 . 2025

### இராசேந்திரம் குசலகுமாரி

அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் குசலகுமாரி அவர்கள் நேற்றுமுன்தினம் (07.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், இராசேந்திரம் அவர்களின் பாசமிகு மனைவியும், அனுசியா (ஆசிரியை - வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்), Dr.அஜந்தன் (சுதேச மருத்துவ திணைக்களம் வடமாகாணம், ஸ்ரீவர்மா மருத்துவ நிலையம் - மருதனார்மடம்), அகல்யா (கனடா), அனந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன் (கனடா), வேணுசுதா (கனடா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுதாகரன் (விபுலானந்தக் கல்லூரி, வவுனியா), யமுனா (காணி ஆணையாளர் திணைக்களம், வடமாகாணம்), அகிலன் (கனடா), கவிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிஸ்கா, அக்ஷா, ஆதீஸ், ஆரன், அமிஷா, அனிஸ்கா, அபிரன், அக்ஷவி, சாக்ஷவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அளவெட்டி கிழக்கு,
அலுக்கை, அளவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/44954) J-1

# பெரமுன முன்னேற்றம்



## சாகர காரியவசம் பெருமிதம்

கொழும்பு, மே 9

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்தோம். ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில் சுமார் 9 இலட்சத்து 54 ஆயிரம் வரையான வாக்குகளைப் பெற்றிருக்கின்றோம். 6 மாதங்களில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி மக்களின் சிந்தனையைத் திரிபு படுத்தியே மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது.

இந்தத் தேர்தலில் பொதுஜன பெரமுன தான் சவால்களுக்கு மத்தியில் வெற்றிபெற்றுள்ளது என்று மகிழ்வுடன் குறிப்பிடவேண்டும். எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணைந்து உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்தை அமைப்பது தொடர்பில் கட்சியின் அரசியல் குழு சிறந்த தீர்மானத்தை எடுக்கும்- என்றார்.

(எ-இ)

## முக்கிய அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் கிரிதாஸ் (கிரி)



மலர்வு 16.06.1983

உதிர்வு 05.05.2025

தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று வெள்ளிக்கிழமை (09.05.2025) நடைபெற இருந்த தகனக்கிரியைகள் நாளை மறுதினம் (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நித்திலைட்ஸ்
குறுக்குறோட், நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
076 839 6935

(CS/3134) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1938



மறைவு 06 . 05 . 2025

### கணபதி கதிரேசு (ஓய்வுநிலை அதிபர்)

சாவகச்சேரி கல்வயலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி கதிரேசு ஆசிரியர் அவர்கள் (06.05.2025) செவ்வாய்க்கிழமை விண்ணுலகெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - தெய்வானை தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், யோகம்மா நடராசா (அவுஸ்திரேலியா), வல்லிபுரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசமோகன், சந்திரமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலாதேவி, சுஜாதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிசயன் அபித்தியா, அபிராம், அருஷிகா, அஷாந்த் அபிராமி, அக்ஷயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2025) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி, அஞ்சலி உரை நிகழ்வுகளோடு காலை 10.00 மணிக்கு வேம்புராய் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58186) E-1

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 . 09 . 1943



மறைவு 10 . 04 . 2025

திருப்பூர் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், துன்னாலை கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

### சுப்பையா வடிவேல் (செல்வம், பப்பா)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (10.05.2025) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திருப்பூர் மயிலிட்டியில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களும், அவரது உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
க.நாகேஸ்வரன்
(வெள்ளை - மருமகன்)
077 959 8025

திருப்பூர் வீதி, மயிலிட்டி.

(CS/58187) J-1

# தேசிய மக்கள் சக்தியினருக்கு வடக்கில் ஆதரவு உயர்வாம்!

கொழும்பு, மே 9

வடக்கில் உள்ளூராட்சிச் சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குவதற்காக சில குழுக்கள் முன்வந்துள்ளன என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் சில சபைகளில் எமக்குப் பெரும்பான்மைப் பலம் இல்லை. எனினும், சில தரப்புகள் எமக்கு ஆதரவு வழங்கி ஆட்சியமைக்க உதவுவதற்காக முன்வந்துள்ளன. அரசாங்க பலம் இருக்கும் கட்சிக்கு உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தையும் வழங்கி தமது பகுதிக்கு ஏதேனும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்கள் எதிர்பார்க்கின்றனர். தேசிய மக்கள் சக்தி பெரும்பாலான இடங்களில் வென்றுள்ளது. சுயாதீன அணிகளின் ஒத்துழைப்பு பெறப்பட்டு முடியுமான வரை பல சபைகளில் ஆட்சியமைக்கப் பார்ப்போம் - என்றார். (ம-44)

# தேசபந்து தென்னக்கோன் விசாரணைக்கு அழைப்பு!

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை மே மாதம் 19ஆம் திகதி விசாரணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் தனது பதவியை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவில் முன்னிலையாகுமாறே அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)

# கசிப்புக்கும், பணத்துக்காகவும் தமிழர்கள் விலைபோகவில்லை

## அமைச்சர் பிமலுக்கு சுமந்திரன் பதிலடி

யாழ்ப்பாணம், மே 9

கசிப்பும் பணமும் கொடுத்து தமிழரசுக் கட்சி வாக்குச் சேகரித்து என்பதை அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்துக்கு வெளியில் வந்து நிரூபித்துக் கட்டாமுடியுமா? என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் சவால் விடுத்துள்ளார்.

சலுகைகளுக்காக வாக்களிப்பவர்கள் தமிழ் மக்கள் என்று இதுவரை காலமும் பிழையான எண்ணத்தை அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொண்டுள்ளார் என்றும் சுமந்திரன் சாடியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அமைச்சர் பிமர் ரட்நாயக்க, இலங்கைத் தமிழரசுக் கட்சி கசிப்பும் பணமும் வழங்கி தேர்தலில் அதிகளவு வாக்குகளை பெற்றதாக குறிப்பிட்டார். இதற்குப் பதிலாக சுமந்திரன் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழரசுக் கட்சி சாத்வீகக் கட்சி மாத்திரமில்லை சமூக அக்கறையுள்ள கட்சியுமாகும். 75 ஆண்டுகளுக்கு மேலான தமிழரசுக் கட்சியின் வரலாற்றை அமைச்சர் பிமல் ரத்நாயக்க எடுத்துப் பார்க்க வேண்டும்.

ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவுசெய்யப்பட்ட மூன்றாம் நாள், முன்னாள் ஜனாதிபதி ரணிலால் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவலை வெளியிடவுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார். ஆனால், இன்றுவரை அந்தத் தகவல்கள் வெளியிடப்படவில்லை. யார் மீதான பயத்தால் இன்னமும் அதை வெளியிடாமல் வைத்திருக்கின்றனர்?

எனவே தேசிய மக்கள் சக்தி மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள வெறுப்பை சகிக்க முடியாமல், அவர்களது உணர்வுகளை அவமதித்து பிழையான சாட்டுதல்களை அமைச்சர் பிமல் வெளியிட்டுள்ள கருத்து அவரது அரசின் சிறுமைத்தனத்தையே வெளிப்படுத்துகிறது. அத்தோடு சலுகைகளுக்காகவும் கைமாறுக்காகவும் விலை போனவர்கள் தமிழர்கள் என்று இதுநாள் வரை அவர் கொண்டுள்ள எண்ணம் மிகத் தவறானது - என்றார். (ம-20)

### ஜூன்...

2ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சியமைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றங்களில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற அரசியற்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு எதிர்வரும் நாள்களில் தவிசாளர்கள், மேயர்கள், தலைவர்களை நியமிக்குமாறு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும். கூடுதலாக, ஒவ்வொரு உள்ளூராட்சி அமைப்புக்கும் நியமிக்கப்படவேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறித்தும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். மேற்கூறிய ஏற்பாடுகள் முடிந்ததும், உள்ளூராட்சி பிரதிநிதிகளின் இறுதிப் பட்டியல் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்படும். உள்ளூராட்சி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பின்படி, உள்ளூராட்சி அமைப்புகள் ஜூன் 2ஆம் திகதி முதல் கூட்டத்தை நடத்த உள்ளன. அதற்கு முன்னர் எங்கள் தரப்பிலிருந்து என்ன செய்யவேண்டும் என்பதை நாங்கள் முடிவுசெய்வோம் - என்றார். (அ-ம-இ)

### சங்கின்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியப் பேரவையும் நாடியுள்ளன என்று தெரியவருகின்றது.

பெரும்பான்மை இல்லாத சில சபைகளில், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் ஆதரவைப் பெறும் கட்சி ஆட்சியமைக்கும் சூழல் காணப்படுகின்றது. இதையடுத்தே, கடந்த இரண்டு தினங்களாக அந்தக் கட்சியுடன் தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியப் பேரவையும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன என்று நம்பகரமான தகவல்கள்மூலம் தெரியவருகின்றது.

இது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களுள் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதற்காக எம்முடன் பல தரப்புகளும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. அந்தக் கட்சிகளுடன் மிகவும் நல்ல முறையில் நாங்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளோம். தமிழ்த் தேசியத்தை உறுதிப்படுத்தும் வகையிலும், எமது மக்கள் இம்முறைவழங்கியுள்ள ஆணையை நலினப்படுத்தாத வகையிலும் ஒரு தரப்புக்கு நாங்கள் எமது ஆதரவை வழங்குவோம். எமது கூட்டணியில் உள்ள அனைத்துத் தரப்பினரும் முறையான கலந்துரையாடலில் ஈடுபட்டு, காத்திரமான வகையில் முடிவெடுத்து, இது தொடர்பான அறிவித்தலை விரைவில் வெளியிடுவோம் - என்றார். (அ-ம-26)

### ஐ.பி.எல்...

உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் தொடரான ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டம், பாகிஸ்தானின் ட்ரோன் தாக்குதல் அச்சம் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதல்களைத் தொடர்ந்து, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அண்மைக்காலமாகப் போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் அதிகாலை இந்தியப் போர் விமானங்கள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் நேரடி மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, நேற்றுக் காலை முதல் மாலை வரை பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் இந்தியா ட்ரோன் தாக்குதலை நடத்திவந்தது. பாகிஸ்தான் சுப்பர் லீக் என்று அழைக்கப்படும் கிரிக்கெட் தொடர் நடைபெறும் ராவல்பின்டி மைதானத்துக்கு அருகில் இந்தியா நடத்திய தாக்குதலால், கராச்சி கிங்ஸ் மற்றும் பெஷாவர் ஷால்மி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் கைவிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இந்தியன் பிறீமியர் லீக் ஆட்டம் நடைபெற்ற தர்மசாலா மைதானத்துக்கு அருகாக பாகிஸ்தானும் ட்ரோன் தாக்குதலை நடத்தியது. இதையடுத்து, பாதுகாப்புக் காரணங்களுக்காக ஐ.பி.எல். தொடரின் நேற்றைய பஞ்சாப் மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் கைவிடப்பட்டுள்ளது. (அ-ம)

### புதிய...

கத்தோலிக்க திருச்சபையின் 267 ஆவது பாப்பரசரைத் தெரிவுசெய்யும் நடைமுறைகள், 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழைமையான சிஸ்டைன் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பமாகின. நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பாப்பரசர் தெரிவுசெய்யப்படவில்லை. இதையடுத்து, நேற்றையதினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நேற்றுக் காலையும் பாப்பரசர் தெரிவுசெய்யப்படவில்லை. இந்த விடயம் சிஸ்டைன் தேவாலயத்தின் புகைக்கூண்டு



வழியாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, நேற்று மாலை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்பட்டார். சிஸ்டைன் தேவாலயத்தின் புகைக்கூண்டு வழியாக வெண்புகை வெளியேறிய போது வத்திக்கானில் குவிந்திருந்த 70 ஆயிரம் மக்களும் ஆர்ப்பரித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த கர்தினால் றொபேட் பிரான்சிஸ் புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார். நேற்றுடன் அவருடைய பிறப்புப் பெயர் முற்றுப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன்படி, அவர் இனிவரும் நாள்களில் பாப்பரசர் 14ஆம் லியோ (14ஆம் சிங்கராயர்) என்று அழைக்கப்படவுள்ளார். (அ-ம)

### ஜனநாயகத்...

வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியைச் சேர்ந்த அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பங்காளிக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளோம். அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தால் இணைந்து ஆட்சியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

அதேவேளை, வவுனியா வடக்கு நெடுங்கேணியில் சிங்கள பௌத்த இனவாத தேசியமக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றுவதனைத் தடுக்கும் வகையில் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது.

(அ-ம-125-26-66)

## சிறப்புக்...

தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக, ஜனாதிபதி அநுரவால் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவே இன்றையதினம் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டிய தன் அவசியம் தொடர்பில் பல்வேறு கருத்துப் பகிர்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இந்தக் குழு இன்று கூடுகின்றமை முக்கியத்துவம்மிக்க விடயமாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## தேசிய...

நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். சட்டத்தரணி வி.மணிவண்ணன் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் பிரதேசங்களின் சில இடங்களில் தேசிய மக்கள் சக்தியினரும் கணிசமான ஆசனங்களைப் பெற்றுள்ளார்கள். அவர்களுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டிணைந்து ஆட்சியமைக்கக்கூடாது. ஏனென்றால், தேசிய மக்கள் சக்தியினரைப் புறக்கணிக்கவேண்டும் என்று நாங்கள் உட்பட அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் மக்களிடம் வலியுறுத்தி வந்தோம். அதனை மக்கள் ஏற்றுள்ளனர். இவ்வாறிருக்கும்போது, தேசிய மக்கள் சக்தியின் ஆதரவைக் கோரி ஆட்சியமைப்பதற்கு தமிழ்க் கட்சிகள் முன்வரக்கூடாது.

தேசிய மக்கள் சக்தியினர் அவர்களாக முன்வந்து ஆதரவு வழங்கினால் அது வேறு விடயம். ஆதரவு வழங்க முன்வருவோரை, ஆதரவு வழங்காதே என்று நாங்கள் கூறமுடியாது. ஆனால், பதவிகளை வழங்குவதாகத் தெரிவித்து தேசிய மக்கள் சக்தியினரின் ஆதரவைப் பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் 'டீல்' பேசினால் அது தேசத்துரோகமே - என்றார். (அ-ம-26-20-125)

## யானை...

மூவர் காயமடைந்தனர். நான்கு வயதுக் குழந்தையும், இரு பெண்களுமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

குறித்த ஆலயத்தில் திருவிழா நடைபெற்று வருகின்றது. திருவிழாவுக்காகக் கொண்டுவந்த யானையே தீப்பந்தத்தைப் பார்த்து மிரண்டு இவ்வாறு தாக்கியதாக, அங்கு நின்றவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பெண்ணொருவருக்கு காலில் தீவிரமான காயம் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (அ-ம-125-26-66-27)

## பயங்கரவாதத்...

இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ள ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையானது எமது நாட்டுக்கு மிக முக்கியமானதாகும். அமெரிக்காவின் வரி விதிப்புகளுக்கு மத்தியில் ஐரோப்பிய வரிச்சலுகையானது எமக்குப் பலமாக அமைந்துள்ளது. எனவே, அதனை நாம் தக்கவைக்கவேண்டும்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. சுற்றாடல், தொழில் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. எமது தரப்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தினாலும், வலியுறுத்தாவிட்டாலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிச்சயம் நாம் நீக்குவோம். அதுதான் எமது கொள்கை. நாம் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் புதிய சட்டத்தை நிறைவேற்றி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் - என்றார். (அ-ம-44)

## தமிழர்களை...

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மார்ச் 28ஆம் திகதி அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது. இதற்கமைய யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களில் மொத்தமாக 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிக்குரிய உரிமங்கள் உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில், அந்த குறிப்பிட்ட பிரதேசங்களுக்குள் உள்ள காணிகளை அரச காணிகளாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் சனத்தொகையை எடுத்துக்கொண்டால் வடக்கு, கிழக்கு தாயக நிலப்பரப்பில் இருக்கின்ற சனத்தொகைக்கு சரிபாதியாக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழ்கின்றனர். உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே அவர்கள் தீவை விட்டு வெளியேறினர். அவர்களுடைய அனைத்துச் சொத்துகளையும் விட்டுவிட்டே, சில நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து புகலிடம் கோரும் நிலைமை இருந்தது.

இவ்வாறு வெளிநாடுகளில் வாழ்பவர்கள் திரும்பமுடியாத சூழ்நிலையும் காணப்படுகின்றது. வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கு தமது காணியை உறுதிப்படுத்தமுடியாத சூழ்நிலையும் உள்ளது. இதனை இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டன.

இந்த அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காமல் தொடர்ந்து தக்க வைத்துள்ளதால், காணி உரிமையாளர்கள் 3 மாதத்துக்குள் இங்கு வந்து காணியை உறுதிப்படுத்தமுடியாத சூழ்நிலையே உள்ளது.

அதேபோல இன்று தமிழர் தாயகத்தில் வாழுகின்ற மக்களுக்கும்கூட பல தடவைகள் இடம்பெயரவேண்டிய நிலை உள்ளது. எனவே, 3 மாத கால இடைவெளி என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல. இந்தக் காணிப் பிரச்சினை யென்பது இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணி என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். இயற்கை நீதிக்கு முரணாக மக்களின் காணிகளை சட்ட விரோதமாகப் பறித்து, அந்தக் காணிகளை குடியேற்றங்களுக்குப் பயன்படுத்தப் போகின்றனர் என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன். இதுதான் உண்மை.

இது அரசாங்கம் அவசரப்பட்டு தவறாகச் செய்யும் விடயம் அல்ல. வடக்கு, கிழக்கில் உள்ள முப்படைகள் அங்கு வாழும் தமிழ் மக்களை எதிரிகள் என்ற கண்ணோட்டத்துடனேயே பார்க்கின்றன.

இந்த அரசாங்கம் மட்டும் அல்ல இதற்கு முன்பு இருந்த அரசாங்கங்களும் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை. ஆதலால், தமிழ் மக்கள் எதிர்காலத்தில் மீண்டும் போராடுவதற்கு முயற்சிக்கலாம் என்ற பயத்தாலேயே தமிழர் தாயகத்தில் கரையோரப் பகுதிகளில் உள்ள நிலங்களை அபகரிப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

"இதற்கு முன் இருந்த அரசாங்கங்கள் இனவாதிகள், தாங்கள்தான் புனிதமானவர்கள்" எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள்தான் இந்த அநியாயத்தை செய்யப் போகின்றனர். இது வெறுமனே தமிழர்களை குறிவைக்கும் செயல் அல்ல, தமிழ்பேசும் மக்களை குறிவைக்கும் செயலாக மாறும். வடக்கில் நடப்பது நாளை கிழக்குக்கும் வியாபிக்கும்.

இராணுவத்தின் தமிழர் விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கு இந்த அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லை. மனோநிலைமையை மாற்றுவதற்கு இயலாது. இவர்களும் இராணுவத்தின் இனவாதச் செயற்பாடுகளுக்கு துணைபோகின்றனர் என்றுதான் பார்க்கவேண்டியுள்ளது. உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் பெரும் பின்னடைவை அரசாங்கம் சந்தித்துள்ளது. இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்துச்செய்யவேண்டும். தமிழ்த் தலைவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வராமல் இந்த விடயத்தில் ஒரு தலைப்பட்சமாகச் செயற்படமுடியாது. அது நல்லிணக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும் - என்றார். (அ-ம-44)

## பொலிஸ்...



சேர்ந்த முகுந்தன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## பிறந்து...

பிறந்து ஏழு நாள்களேயான பச்சிளம் சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

நீர்வேலியைச் சேர்ந்த சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது. உயிரிழந்த சிசு, இரட்டைப் பிள்ளைகளில் ஒருபிள்ளை என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## உழவு...

யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்கி இளம் குடும்பத்தலைவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



அராலி மேற்கு, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் தனீஸ்வரன் (வயது-38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உழவு இயந்திரத்தின் கீழே இறங்கி நின்றவாறு அவர் உழவியந்திரத்தை இயக்கியுள்ளார். இதன்போது, உழவியந்திரம் திடீரெனப் பயணப்பட்டுள்ளது. இதையடுத்து, அவர் நிலைதடுமாறி கீழே விழ, உழவியந்திரம் அவருக்கு மேலாக ஏறியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர். மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26-27-66)

## திடீர்...

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வயிற்றோட்டத்தாலும், அதன் பின்னர் வயிற்றுக்குத்தாலும் பாதிக்கப்பட்டிருந்த பாலகன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

குடவத்தை துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த வி.சுயாந் (வயது-3) என்ற பாலகனே இவ்வாறு உயிரிழந்தவனாவான். கடந்த 28ஆம் திகதி அந்தச் சிறுவனுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர், கடந்த நான்காம் திகதி வயிற்றுக்குத்தும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் அந்தப் பாலகன் உயிரிழந்துள்ளார்.

இறப்புக்கான காரணங்கள் தெரியவராத நிலையில், மாதிரிகள் பேறப்பட்டுகொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தோட்டத்துக்குச்...



மிளகாய் தோட்டத்துக்குச் சென்ற இளம் விவசாயி ஒருவர், மின்னல் தாக்கத்துக்கு உட்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் ஏழாலையில் இடம்பெற்றுள்ளது.

ஏழாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் குமரன் (வயது39) என்ற இளம் விவசாயியே இவ்வாறு உயிரிழந்தவராவார். குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125-26-66-100-27)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மே 9

தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விப்பிரிவு நடத்தும் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன், சிறப்பு விருந்தினர்களாக தொழில் வாண்மையாளர்களான வே.சுபாஸ்கரன், பூ.பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-66)

**அறை வாடகைக்கு உண்டு**

K.K.S Road யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து 200m தூரத்தில் Rooms வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **076 295 9564**

**வேலைக்கு ஆள் தேவை**

றொட்டி வேலை, உணவு பரிமாறுவோர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 203 0625**

# அதிகாரிகளின் அலட்சியம் பறிபோகின்றன உயிர்கள்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 9**

**அண்மைய நாள்களில் நடந்துள்ள சில பகிடிவதைச் சம்பவங்கள் உரிய கல்விக் கட்டமைப்பு அதிகாரிகளின் அலட்சியத்தால் நடந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அந்த அதிகாரிகளும் பொறுப்புக்கூறவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.**

அண்மையில் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிர்மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்தவொரு கல்வியியல் கட்டமைப்புகளிலும் எந்தவொரு மாணவருக்கு எதிராகவும் பகிடிவதை மற்றும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அது நாட்டின் சட்டத்தை மாத்திரமன்றி, அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளையும் மீறுகின்ற செயலாகும்.

சட்டவிரோத பகிடிவதைச் செயற்பாடுகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்விக்கட்டமைப்புகளின் அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பில் சமனலவெள பொலிஸாரால் பலாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது- என்றுள்ளது. (எ-இ)

# உணவு தொண்டையில் சிக்கி முன்னாள் அதிபர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 9

உணவு தொண்டையில் சிக்கியதில் ஓய்வுபெற்ற அதிபர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு நடைபெற்றுள்ளது. நுணாவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த பொ.அம்பலவாணர் (வயது-63) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-28)

# மரண அறிவித்தல்

மலர்வு 07 . 10 . 1935



உதிர்வு 06 . 05 . 2025

## சின்னத்தம்பி தர்மலிங்கம்

**(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

கந்தரோடை மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்கள் கடந்த (06.05.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-முத்துப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- செல்லம்மா தம்பதியின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, பாக்கியம், தங்கம்மா, பர்வதம், கந்தசாமி, ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுபாஷ்கரன் (ராஜீ-சுவிஸ்), சுகிர்தா, கேதீஸ்வரன் (ஈசன்-சுவிஸ்), விஜிகரன் (விஜி-சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேமேஸ்வரி, குகநேசன், (இளைப்பாறிய கட்டட திணைக்கள பொறியியலாளர்), சசிவதனி, ரஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி - சங்கர், சதீனா, விதுசி, மிதுலா - சங்கீர்த்தன், சகானா, சஜிதன், கிருத்திகா, தர்சனா, சஜிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஞ்சனா, ஜானவி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 238 9864**
**021 205 8531**

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 11 - 1952



மறைவு 08 - 05 - 2025

## குழந்தைவேலு இராசலிங்கம்

காரைநகர் பலகாடை பிறப்பிடமாகவும் காரைநகர் புதுறோட், இல 55/2, பழம் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு இராசலிங்கம் நேற்று (08.05.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்தையா சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜினி (அவுஸ்திரேலியா), சண்முகஜோதி (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிதரன் (அவுஸ்திரேலியா), தர்சினி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவஞானம், சரஸ்வதி, சவுந்தரம் மற்றும் இராமச்சந்திரன், கமலாதேவி, தவமணிதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் வேலாயுதபிள்ளை, திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற அன்னலெட்சுமி, சிவஞானம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் அபினேஷ், அபிநயா, அக்ஷயா, அக்ஷிதன், அக்ஷரா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பல் ஓடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல 55/2 பழம் வீதி**
**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்.**
**மகன் - 0773126543**

(CS 58192) D"

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.